வ.உ.சிதம்பரனார் பிறந்த நாளையொட்டி, தூத்துக்குடி கீழூர் சைவ சமுதாய சங்கம் சார்பில், தூத்துக்குடி அய்யலு தெருவில் உள்ள சிலைக்கு அவரது பேத்தி மரகத மீனாட்சி ராஜா தலைமையில் மாலை அணிவித்து மரியாதை செலுத்திய சங்க நிர்வாகிகள்.

நாகர்கோவிலில்...

தாழக்குடியில் வ.உ.சி. சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்திய அகில இந்திய வஉசி பேரவையினர்.

நாகர்கோவில், செப். 5: வ.உ.சிதம்பரனார் பிறந்தநாளை முன்னிட்டு, தவெக, பல்வேறு அமைப்புகள் சார்பில் அவரது சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தப்பட்டது.

நாகர்கோவிலை அடுத்த ஆரல்வாய்மொழி வஉசி நகரில் உள்ள மணி மண்டபத்திலுள்ள சிலைக்கு தவெக கன்னியாகுமரி கிழக்கு மாவட்டச் செயலர் எஸ்.ஆர். மாதவன் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார். செயற்குழு உறுப்பினர் சக்திகுமரன், மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் ராஜன், இணை அமைப்பாளர் ஜெபா, தொழிலதிபர் பால்ராஜ், மாமன்ற உறுப்பினர் அக்சயா கண்ணன், மாவட்ட கொள்கை பரப்புச் செயலர் ரூபன், தோவாளை மத்திய ஒன்றியச் செயலர் விஜய், மாவட்ட தொண்டரணி இணை அமைப்பாளர் செல்வகுமார், பேரூர் செயலர் சந்திரகுமார் உள்ளிட்ட பலர் மரியாதை செலுத்தினர்.

தோவாளை வட்டம், தாழக்குடி பேருந்து நிலையத்தில் உள்ள வஉசி சிலைக்கு பொதுமக்கள் சார்பில், அகில இந்திய வஉசி பேரவைத் தலைவர் தாணு தலைமையில், பேரூராட்சி முன்னாள் தலைவர் ரோகிணி அய்யப்பன் முன்னிலையில், வெள்ளாளர் சமுதாயத் தலைவர் செண்பகம் மரியாதை செலுத்தினார். முன்னாள் வார்டு உறுப்பினர் தாழக்குடி அய்யப்பன் உள்ளிட்ட பலர் பங்கேற்றனர்.

வீ த லீடர்ஸ் அமைப்பு சார்பில் மீன் விவசாயிகள் உற்பத்தியாளர் கூட்டுறவு சங்கத் தலைவர் சகாயம் தலைமையில் மரியாதை செலுத்தப்பட்டது. தாழக்குடி வஉசி பேரவைத் தலைவர் சபரீஷ், நிர்வாகிகள் துவரங்காடு ராஜேஷ், கடுக்கரை செந்தில், சூர்யா, ரமேஷ் ரங்கா, தாழக்குடி மாதவன், இறச்சகுளம் செல்வகுமார், விக்னேஷ், அழகியபாண்டியபுரம் மெர்லின், புத்தேரி பிரேம், பூதப்பாண்டி பிரேம்குமார், திருவட்டாறு தேவசிங், விஜின், புதூர் மதன்குமரன், நாகர்கோவில் கண்ணன்ராஜ், சுபாஷ் உள்ளிட்ட பலர் பங்கேற்றனர்.

வ.உ.சி. பிறந்தநாள்: சிலைக்கு அரசியல் கட்சியினர் மரியாதை

தூத்துக்குடியில் வ.உ.சி. சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்திய முன்னாள் அமைச்சர் பி.கீதாஜீவன். (வலது) மாநகர் மாவட்டத் தலைவர் எஸ்.எம். சகாயராஜ் தலைமையிலான காங்கிரஸார்.

தூத்துக்குடி, செப். 5: சுதந்திரப் போராட்ட தியாகி வ.உ.சிதம்பரனாரின் 155-ஆவது பிறந்தநாள் விழாவையொட்டி, தூத்துக்குடி பழைய மாநகராட்சி அலுவலகத்தில் உள்ள அவரது சிலைக்கு, அரசியல் கட்சியினர், சமூக அமைப்பினர் மாலை அணிவித்து, மரியாதை செலுத்தினர்.

தூத்துக்குடி பழைய மாநகராட்சி வளாகத்தில் உள்ள வ.உ.சி. சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்திய மேயர் ஜெகன் பெரியசாமி.

வடக்கு மாவட்ட திமுக சார்பில், மாவட்டச் செயலரும், முன்னாள் அமைச்சருமான பி.கீதாஜீவன் தலைமையில் மாலை அணிவித்து மரியாதை செலுத்தப்பட்டது. மாநகரச் செயலர் ஆனந்தசேகரன், துணை மேயர் ஜெனிட்டா, மாநில மீனவரணி துணைச் செயலர் புளோரன்ஸ், மாவட்ட அவைத் தலைவர் செல்வராஜ் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

தூத்துக்குடி மாநகர் மாவட்ட காங்கிரஸ் கமிட்டி சார்பில், மாவட்டத் தலைவர் எஸ்.எம். சகாயராஜ்தலைமையில்சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தப்பட்டது. மண்டலத் தலைவர்கள் சேகர், ஐசன் சில்வா, நிர்மல் கிறிஸ்டோபர், ஜான் சாமுவேல் உள்ளிட்ட கட்சி நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

தூத்துக்குடி மாவட்ட சமத்துவ மக்கள் கழகம் சார்பில், மாவட்டச் செயலர் மாலைசூடி அற்புதராஜ் தலைமையில், மாநில தொழிற்சங்கச் செயலர் ஜெபராஜ் டேவிட், மாநில கலை இலக்கிய அணி செயலர் அந்தோணி பிச்சை உள்ளிட்டோர் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர்.

இந்து மக்கள் கட்சி சார்பில், மாநிலச் செயலர் தா.வசந்தகுமார் தலைமையில் மாலை அணிவித்து மரியாதை செலுத்தப்பட்டது.

ஆத்தூரில்...

ஆறுமுகனேரி, செப். 5: ஆத்தூர் கீழ ரத வீதியில் உள்ள சைவ வேளாளர் அபிவிருத்தி சங்க வளாகத்தில், வஉசி பிறந்த நாள் விழா நடைபெற்றது.

சங்கத் தலைவர் ஆண்டியப்பன், செயலர் கார்த்திகேயன், பொருளாளர் சீனிவாசன் ஆகியோர் வஉசி படத்துக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர். தவெக தூத்துக்குடி தெற்கு மாவட்டச் செயலர் பிரைட்டர், ஆழ்வார்திருநகரி கிழக்கு ஒன்றியச் செயலர் ஜெயபிரபு, மாவட்ட தகவல் தொழில்நுட்ப அணி அமைப்பாளர் பேர்ல்ஸ் மஃபத்லால், நகரச் செயலர் செல்வமுருகன், மாவட்ட வர்த்தகரணி துணை அமைப்பாளர் தில்லை யோக ஆனந்தன் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகப் பங்கேற்றனர்.

திருச்செந்தூர் சுப்பிரமணிய சுவாமி கோயில் முன்னாள் அறங்காவலர் அண்ணாமலை சுப்ரமணியன், ஆத்தூர் சந்தனமாரி அம்பாள் கோயில் தர்மகர்த்தா நடராஜன், ஆத்தூர் சோமநாத சுவாமி கோயில் முன்னாள் அறங்காவலர் வார்டு கவுன்சிலர் காசி உள்ளிட்ட பலர் பங்கேற்றனர்.

திருச்செந்தூரில்...

திருச்செந்தூர், செப். 5: திருச்செந்தூரில் வஉசி பிறந்தநாளை முன்னிட்டு, அவரது சிலைக்கு கட்சியினர், சமுதாயத்தினர் மாலையணிவித்து மரியாதை செலுத்தினர்.

சைவ வேளாளர் ஐக்கிய சங்கம் சார்பில் உச்சினி மாகாளியம்மன் கோயில் அருகே அலங்கரிக்கப்பட்ட அவரது படத்துக்கு சங்கத் தலைவர் ஆனந்த ராமச்சந்திரன், செயலர் பொன்முருகேசன், வஉசி நற்பணி மன்றம் சார்பில் தலைவர் இசக்கிமுத்து, மாவட்ட தமிழ்நாடு சைவ வேளாளர் சங்கம் சார்பில் மாவட்ட துணைத் தலைவர் ராமன் தலைமையில், மாவட்டச் செயலர் பாலன் உள்ளிட்டோர் மரியாதை செலுத்தினர். மாவட்ட இளைஞர் பேரவைத் தலைவர் குரும்பூர் ராம்குமார், கணக்கர் சடகோபன், வஉசி நற்பணி மன்றச் செயலர் சுந்தர் உள்ளிட்ட பலர் பங்கேற்றனர்.

திமுக சார்பில் நகர்மன்றத் தலைவர் சிவ ஆனந்தி, நகர்மன்ற உறுப்பினர் செந்தில்குமார், ரேவதி கோமதிநாயகம் உள்ளிட்டோர் மரியாதை செலுத்தினர். நிர்வாகிகள் இசக்கிமுத்து, அமலி சந்திரன், மகாராசன் உள்ளிட்ட பலர் பங்கேற்றனர்.

அதிமுக சார்பில் ஒன்றியச் செயலர் பூந்தோட்டம் மனோகரன், நகரச் செயலர் மகேந்திரன், நகரப் பொருளாளர் வெங்கடாசலம், வார்டு செயலர் சந்தனராஜ் உள்ளிட்டோர் மரியாதை செலுத்தினர்.

பாஜக சார்பில் நகரத் தலைவர் செல்வகுமரன் மரியாதை செலுத்தினார். மாவட்ட துணைத் தலைவர் சரஸ்வதி, உள்ளாட்சிப் பிரிவு மாவட்டத் தலைவர் சண்முக ஆனந்த், மகளிரணி மாநிலச் செயலர் ஜெயந்தி, மாவட்டப் பொதுச் செயலர் விஜயலட்சுமி, நகரப் பொதுச் செயலர் கார்த்திகை கந்தன், ஒருங்கிணைப்பாளர் சங்கரநயினார் உள்ளிட்ட பலர் பங்கேற்றனர். அண்ணாமலையின் வீ த லீடர்ஸ் அமைப்பு சார்பில், பொறுப்பாளர் பலவேசகண்ணன் மரியாதை செலுத்தினார்.

ஓட்டப்பிடாரத்தில் கட்சியினர் மரியாதை...

வ.உ.சி. சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்திய காங்கிரஸார். (வலது) வ.உ.சி. சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்திய அதிமுகவினர்.

தூத்துக்குடி, செப். 5: வ.உ.சிதம்பரனாரின் 155ஆவது பிறந்தநாளையொட்டி, ஓட்டப்பிடாரத்தில் உள்ள அவரது சிலைக்கு அரசியல் கட்சியினர் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர்.

தூத்துக்குடி வடக்கு மாவட்ட காங்கிரஸ் தலைவர் கே. பெருமாள்சாமி அறிவுறுத்தலின்பேரில், ஓட்டப்பிடாரம் ஒன்றியம், நகர காங்கிரஸ் சார்பில் நடைபெற்ற நிகழ்ச்சிக்கு, மாவட்ட துணைத் தலைவர் வேலாயுதசாமி தலைமை வகித்தார்.

ஓட்டப்பிடாரம் வடக்கு வட்டாரத் தலைவர் விஜய், புதியம்புத்தூர் நகரத் தலைவர் துரைமணி, வடக்கு மாவட்ட மகளிரணி மாவட்டத் தலைவி தனலட்சுமி, வடக்கு மாவட்டச் செயலர் அனிதா, ஆராய்ச்சி துறை ஒன்றியச் செயலர் ஹரி பாலகிருஷ்ணன், மாவட்ட செயற்குழு உறுப்பினர் ஜெயக்குமார் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

மாவட்டச் செயலர் பேரையா, விவசாய அணி மாவட்டத் தலைவர் ராமர் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

அதிமுக: அதிமுக அமைப்புச் செயலர் என். தளவாய் சுந்தரம் எம்எல்ஏ தலைமையில், மாவட்டச் செயலரும், முன்னாள் அமைச்சருமான எஸ்.பி. சண்முகநாதன் முன்னிலையில், முன்னாள் அமைச்சர்கள் பா. வளர்மதி, ப. மோகன், சி.த. செல்லப்பாண்டியன், அமைப்புச் செயலர் என். சின்னதுரை உள்ளிட்டோர் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர். முன்னாள் எம்எல்ஏ.க்கள் மோகன், சின்னப்பன் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

கோவில்பட்டியில்...

வ.உ.சி. சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்திய அதிமுகவினர். (வலது) வ.உ.சி. சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்திய தவெகவினர்.

கோவில்பட்டி, செப். 5: கோவில்பட்டி சைவ வேளாளர் சங்கக் கட்டடத்தில் உள்ள வ.உ.சி. சிலைக்கு சைவ வேளாளர் சங்கத் தலைவர் தெய்வேந்திரன் தலைமையில் மாலை அணிவித்து மரியாதை செலுத்தப்பட்டது.

தமிழக வெற்றிக் கழகம் சார்பில் தூத்துக்குடி வடக்கு மாவட்டச் செயலர் பாலசுப்பிரமணியன், மதிமுக சார்பில் வடக்கு மாவட்டச் செயலரும், நகர்மன்றத் தலைவருமான (பொ) ஆர்.எஸ். ரமேஷ், அதிமுக சார்பில் நகரச் செயலர் விஜய பாண்டியன், திமுக சார்பில் நகரப் பொறுப்பாளர் (கிழக்கு) சுரேஷ் உள்ளிட்டோர் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர்.

அறிஞர் சங்கர வள்ளிநாயகம் அறக்கட்டளை நிறுவனரும், மூத்த தமிழறிஞருமான திருமலை முத்துசாமி, ஜீவ அனுக்கிரக அறக்கட்டளை நிறுவனத் தலைவர் ராஜேந்திரன், முத்தமிழ் மன்றம் அறக்கட்டளை செயலர் பிரபு, கருத்துரிமைப் பாதுகாப்புக் கூட்டமைப்பு தலைவர் தமிழரசன், விசிக நகரச் செயலர் கருப்பசாமி பாண்டியன் உள்ளிட்ட பல்வேறு அமைப்பு நிர்வாகிகள் வ.உ.சி. சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர்.

வ.உ.சி.யின் கொள்ளுப் பேத்தி: வ.உ.சி.யின் கொள்ளுப் பேத்தி செல்வி கோவில்பட்டி பாரதி நகரில் உள்ள தனது வீட்டில் வ.உ.சி. படத்துக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார்.

சாகித்திய அகாதெமி விருது பெற்ற எழுத்தாளர் சோ. தர்மன் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

பின்னர், அவர் செய்தியாளர்களிடம் கூறியதாவது:

வ.உ.சி.யின் பிறந்த நாளை வழக்குரைஞர் தினமாக அனுசரிக்க வேண்டும். வ.உ.சி. பிறந்த இடமான ஓட்டப்பிடாரத்தில் அவருக்கு மிகப் பிரமாண்டமான மணி மண்டபம் கட்ட வேண்டும். சுதந்திரப் போராட்ட தியாகிகளை கொச்சைப்படுத்தும் விதமாக பேசும் நபர்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றார் அவர்.

வ.உ.சி. படத்துக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்திய வ.உ.சி.யின் கொள்ளுப் பேத்தி செல்வி.

தூத்துக்குடி துறைமுகத்தில்...

போட்டியில் வெற்றி பெற்ற மாணவிக்கு பரிசு வழங்கிய துறைமுக ஆணையத் தலைவர் சுஷாந்த குமார் புரோஹித்.

தூத்துக்குடி, செப். 5: வ.உ. சிதம்பரனார் பிறந்தநாளையொட்டி, வ.உ.சி. துறைமுகத்தில் நடைபெற்ற விழாவில், அவரது சிலைக்கு மாலையணிவித்து மரியாதை செலுத்தப்பட்டது.

துறைமுக ஆணையத் தலைவர் சுஷாந்த குமார் புரோஹித், தலைமை கண்காணிப்பு அதிகாரி பி. கவின் மகாராஜ் ஆகியோர் முன்னிலை வகித்தனர். முனைவர் ந. சாத்தம்மை பிரியா, வ.உ.சி.யின் வாழ்க்கை, கொள்கைகள் குறித்து சிறப்புரையாற்றினார்.

தொடர்ந்து, தேசிய காசநோய் ஒழிப்புத் திட்ட செய்திமடல் வெளியிடப்பட்டது. மாணவர்களின் கலைநிகழ்ச்சிகள் நடைபெற்றன. பல்வேறு போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கு பரிசுகள் வழங்கப்பட்டன. துறைமுக ஆணையச் செயலர் எஸ்.பி. மோகன் குமார் வரவேற்றார். தலைமை மருத்துவ அலுவலர் பி. நரேஷ் குமார் நன்றி கூறினார்.

ஆறுமுகனேரி: ஆறுமுகனேரி சைவ வேளாளர் சங்கம் சார்பில் நடைபெற்ற நிகழ்ச்சியில் தமிழ்நாடு சைவ வேளாளர் சங்க தூத்துக்குடி மாவட்ட தலைவர் ஜெ. சங்கரலிங்கம் தலைமை வகித்தார். ஆறுமுகனேரி சங்கச் செயலர் முருகன், பொருளாளர் கற்பகவிநாயகம், திரவியசுந்தரம், சுப்பிரமணியன், இளைஞர் பேரவை நிர்வாகிகள் முத்துசங்கர், சோமு, சங்கர், ராஜாசுப்பையா, நடராஜன், குரு ஜெகதீஸ் உள்படபலர் கலந்து கொண்டனர்.

சாத்தான்குளம்: சாத்தான்குளத்தில் வ. உ. சிதம்பரனார் பிறந்தநாள் சனிக்கிழமை கொண்டாடப்பட்டது. சாத்தான்குளம் வட்டார சைவ வேளாளர் சங்கம் சார்பில், பழைய பேருந்து நிலையத்தில் வைக்கப்பட்டிருந்த வ.உ.சி உருவப்படத்திற்கு, சங்கத் தலைவர் ஆறுமுகம் தலைமையில் மலர்தூவி மரியாதை செலுத்தப்பட்டது. காசி விஸ்வநாதர் கோயில் தர்மகர்த்தா தெ. சண்முகராஜா முன்னிலை வகித்தார்.

சாத்தான்குளம் வட்டார வ. உ.சி. சைவ வேளாளர் சங்கம் சார்பில் காசிவிஸ்வநாதர் சமேத விசாலாட்சி அம்மன் கோயில் முன் நடைபெற்ற வ.உ.சி. பிறந்தநாள் விழா, சங்க முதல் கூட்டத்திற்கு கோயில் தர்மகர்த்தா தலைமை வகித்தார். தொடர்ந்து, வ.உ.சி. உருவப்படத்திற்கு மாலையணிவித்து மரியாதை செலுத்தப்பட்டது. 75 பெண்களுக்கு சேலை வழங்கப்பட்டது.

யூனியன் பேங்க் ஆஃப் இந்தியா (यूनियन बैंक ऑफ इंडिया)

சொத்து மீட்பு கிளை

மின் ஏல விற்பனை அறிவிப்பு
அசையா சொத்துக்களுக்கானது.

எண்.168, இரண்டாவது தளம், லிங்கி செட்டி தெரு, பாரிஸ் கார்னர், சென்னை - 600 001, போன்: 91375 54740
மின்னஞ்சல்: ubin0554740@unionbankofindia.bank.in

கடனீட்டு சொத்துக்களை ரொக்கமாக்குதல் நிதிச் சொத்துக்களை சீரமைத்தல் மற்றும் கடனீட்டு சொத்துக்கள் அமலாக்கச் சட்டம் 2002 (விதி 8 & 9 சேர்த்து வாசிக்கவும்) பாதுகாப்பு நடைமுறை விதிகள் கீழ் அடமானம் வைக்கப்பட்டுள்ள அசையாச் சொத்துக்களை இ-ஏலம் மூலம் விற்பனை செய்தல்.

இந்த அறிவிப்பின் மூலம் பொதுமக்களுக்கு பொதுவாகவும், கடன்தாரர்கள் மற்றும் ஜாமீன்தாரர்களுக்கு குறிப்பாகவும் அறிவிப்பது யாதெனில், கீழே கையொப்பமிட்டுள்ளவர், யூனியன் பேங்க் ஆஃப் இந்தியா, அதிகாரப்பூர்வ அதிகாரியாக இருக்கிறபடியால், அடமானமாக வைக்கப்பட்டு, வங்கியால் சுவாதீனம் செய்யப்பட்டுள்ள கீழே விவரிக்கப்பட்டுள்ள சொத்துக்களை, வங்கிக்குச் சேர வேண்டிய கடன் பாக்கித்தொகை, வட்டி மற்றும் இதர செலவுகளை வசூலிக்கும் பொருட்டு பின்னணு ஏலத்தில் விடப்படுகிறது. சொத்துக்களானது "உள்ள இடத்தில் உள்ளவாறு", "உள்ளது உள்ளவாறு" மற்றும் "உள்ளதெல்லாம் உள்ளவாறு" எனும் அடிப்படையில் விற்பனை செய்யப்படும். மேலும் கடன்தாரர்கள்/ஜாமீன்தாரர்கள், குறைந்தபட்ச கேட்பு விலை மற்றும் டேவணித் தொகை கீழே குறிப்பிடப்பட்டுள்ளது.

கடன்தாரர் பெயர் மற்றும் முகவரி : மாண்புமிகு NCLT இன் 16.02.2023 தேதியிட்ட ஆணையின்படி, முன்னர் M/s ST JOHN FREIGHTS SYSTEMS LIMITED ஆக கடன்வசதி பெற்ற ஜாமீன்தாரர்கள்/ அடமானதாரர்களுக்கு IBC 2016 இன்கீழ் தீர்வில் உள்ளது.

இயக்குநர் & ஜாமீன்தாரர்: 1) திரு.ஜான்சன் தங்கையா, த/பெ. S.K.தங்கையா, எண்.106 J / 66, மில்லர்புரம், தூத்துக்குடி-628008. 2) திருமதி.அன்னி ஜான்சன், க/பெ. T.ஜான்சன், எண்.106 J /66, மில்லர்புரம், தூத்துக்குடி-628008. 3) திரு.J.சாமுவேல் ஜெஃப்சன், த/பெ. திரு.T.ஜான்சன், எண்.106 J / 66, மில்லர்புரம், தூத்துக்குடி – 628008.

ஜாமீன்தாரர்: 1) திரு.G.செல்வராஜ் மோசஸ், த/பெ.திரு. கிளாட்சன் எண்.114A, இராஜமன்னார் தெரு, தூத்துக்குடி - 628008. 2) திரு.N.திவாகரன், த/பெ. திரு.நடேசன், எண்.4/267/1, IIவது தெரு, முத்தம்மாள் காலனி, தூத்துக்குடி– 628002. 3) திரு.A.D.செல்வகுமார் சாமுவேல், த/பெ.திரு.ஆரோன் துரைப்பாண்டியன், 97G/8, ஆசிரியர் காலனி, 6வது தெரு, தூத்துக்குடி - 628 008. 4) திரு.G.பொன்ராஜ், த/பெ திரு. கிளாட்சன், பழைய எண்.2, புதிய எண். 3 G.A.சாலை, சென்னை-600 021. 5) திரு.K.இளங்கோ, த/பெ.திரு.V.கிருஷ்ணமூர்த்தி, மனை எண். 857, 90வது தெரு, 13வது செக்டர், K.K.நகர், சென்னை - 600 078. 6) திரு.N.பழனிகுமார், த/பெ.திரு.A.நடராஜன், 1/129 A1, கதிர்வேல் நகர், தூத்துக்குடி – 628008.

பெருநிறுவன ஜாமீன்தாரர்கள்: 1) M/s. Atlantic Shelters Pvt. Ltd, எண்.9/5, நந்தனம் விரிவு முதல் தெரு, நந்தனம், சென்னை-600 035. 2) M/s. Calubura Promotors Pvt Ltd, எண்.480, அண்ணா சாலை, கிங்ராஜ் காம்ப்ளக்ஸ்-I, 7வது தளம், நந்தனம், சென்னை - 600 035. 3) M/s. Chinaberry Builders Pvt. Ltd, எண்.9/5, நந்தனம் விரிவு முதல் தெரு, நந்தனம், சென்னை-600 035. 4) M/s. Curlews Developers Pvt Ltd, 2/18/3, வடக்கு பிளாக், கணேஷ் நகர், பாளையங்கோட்டை சாலை மேற்கு, தூத்துக்குடி–628 003. 5) M/s. Herons Relators Pvt. Ltd, 2/18/3, வடக்கு பிளாக், கணேஷ் நகர், பாளையங்கோட்டை சாலை மேற்கு, தூத்துக்குடி–628 003. 6) M/s. Murrey Promoters Pvt Ltd, எண்.480, அண்ணா சாலை, கிங் ராஜ் காம்ப்ளக்ஸ்-II, 7 வது தளம், நந்தனம், சென்னை - 600 035. 7) M/s. Nightingale Shelters Pvt Ltd, எண்.9/5, நந்தனம் விரிவு முதல் தெரு, நந்தனம், சென்னை-600 035. 8) M/s. Nile Shelters Pvt Ltd. எண்.9/5, நந்தனம் விரிவு முதல் தெரு, நந்தனம், சென்னை-600 035.

நிலுவை தொகை: 30-06-2026 அன்றுள்ளபடி ரூ.29,37,39,054.50 மேலும் எதிர்கால வட்டி, இதர கட்டணங்கள் உட்பட

விற்பனை செய்யப்படவுள்ள கடனீட்டு அசையாச் சொத்தின் விவரங்கள்;

சொத்து எண். 1: M/s Chinaberry Builders Private Limited இன் சொத்து. தூத்துக்குடி பதிவு மாவட்டம், கடம்பூர் சார்பதிவாளர் அலுவலகத்திற்குட்பட்ட, பூவாணி கிராமம், அயன் புன்செய் சர்வே எண்.164/5B இல் அடங்கிய 1.66.0 ஹெக்டேர் அதற்குச் சமமான 4 ஏக்கர்கள் 10 சென்ட்கள் விஸ்தீரணமுள்ள நிலம். அதன் எல்லைகள்: தெற்கில்: பொதுப் பாதை; வடக்கில் : திரு. மாதவ ரெங்கசாமி மற்றும் திரு. இராமகிருஷ்ணசாமி ஆகியோரின் உரிமைப்பெற்ற புன்செய் நிலம்; கிழக்கில்: திரு. மாதவ ரெங்கசாமி அவர்களின் உரிமைப்பெற்ற புன்செய் நிலம்; மேற்கில்: திரு. துகன் உரிமைப்பெற்ற புன்செய் நிலம்;

குறைந்தபட்ச கேட்பு விலை	டேவணித் தொகை	ஏலஉயர்வுத்தொகை	சுவாதீனம்
₹ 12,15,000/-	₹ 1,21,500/-	₹ 50,000/-	ஆக்கப்பூர்வ

சொத்து எண். 2: M/s Curlews Developers Private Limited இன் சொத்து: தூத்துக்குடி பதிவு மாவட்டம், புதுக்கோட்டை சார்பதிவு அலுவலகத்திற்குட்பட்ட, ஸ்ரீவைகுண்டம் வட்டம், செக்காரக்குடி கிராம அயன் புன்செய் சர்வே எண்.1278/1 இல் அடங்கிய 1.24 சென்ட்கள் அதற்குச் சமமான 0.50.0 ஹெக்டேர் நிலம் மற்றும், தூத்துக்குடி பதிவு மாவட்டம், புதுக்கோட்டை சார்பதிவு அலுவலகத்திற்குட்பட்ட, ஸ்ரீவைகுண்டம் வட்டம், செக்காரக்குடி கிராம அயன் புன்செய் சர்வே எண்.1241/3 இல் அடங்கிய 1.98 சென்ட்கள் அதற்குச் சமமான 0.80.0 ஹெக்டேர் நிலம், ஆக மொத்தம் 3 ஏக்கர்கள் 22 சென்ட்கள்.

குறைந்தபட்ச கேட்பு விலை	டேவணித் தொகை	ஏலஉயர்வுத்தொகை	சுவாதீனம்
₹ 10,74,000/-	₹ 1,07,400/-	₹ 50,000/-	ஆக்கப்பூர்வ

சொத்து எண். 3: M/s Herons Realtors Private Limited இன் சொத்து: தூத்துக்குடி பதிவு மாவட்டம், புதுக்கோட்டை சார்பதிவு அலுவலகத்திற்குட்பட்ட, ஸ்ரீவைகுண்டம் வட்டம், செக்காரக்குடி கிராம அயன் புன்செய் சர்வே எண்.1149/2 இல் அடங்கிய 3 ஏக்கர்கள் 45 சென்ட்கள் நிலம் அதில் தென்புற கடைசியில் 2 ஏக்கர்கள் 80 சென்ட்கள் அதற்குச் சமமான 1.13.00 ஹெக்டேர் நிலம். வடக்கில் : திரு.சண்முகம் பிள்ளை அவர்களின் நிலத்தின் பாகம்; தெற்கில் : கிழக்கு மேற்காக செல்லும் நடை பாதை; கிழக்கில் : திரு.கோமதியா பிள்ளை அவர்களின் நிலம்; மேற்கில் : திரு.போத்திப்பிள்ளை அவர்களின் நிலம்.

குறைந்தபட்ச கேட்பு விலை	டேவணித் தொகை	ஏலஉயர்வுத்தொகை	சுவாதீனம்
₹ 19,40,000/-	₹ 1,94,400/-	₹ 50,000/-	ஆக்கப்பூர்வ

வங்கிக்குத் தெரிந்தவரை மேற்குறிப்பிட்ட சொத்திற்கு வில்லங்கங்கள் ஏதுமில்லை.
இருப்பினும், ஏலதாரர்கள் ஏலத்தை சமர்ப்பிப்பதற்கு முன் வில்லங்க சான்றிதழினை சரிபார்க்க அறிவுறுத்தப்படுகிறார்கள்)

மின் ஏல தேதி & நேரம் : 29.09.2026 நேரம்: மதியம் 12 மணி முதல் மாலை 5 மணி வரை (தலா 10 நிமிடங்கள் கொண்ட கால நீட்டிப்புகள் தொடர்ந்து நடைபெறும்) மின் ஏல இணையதளம்: https://BAANKNET.COM

விருப்பமுள்ள ஏலதாரர்கள் பதிவு மற்றும் கையேடு பற்றிய https://BAANKNET.com/ என்ற இணையதளத்தை பார்க்கலாம் மற்றும் ஏதேனும் கேள்விகளுக்கு 8291220220 எண்களிலும் & மின்னஞ்சல்: support.BAANKNET@psballiance.com, கேட்டு கொள்ளலாம். மேலும் விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளை விவரங்களுக்கு https://www.unionbankofindia.bank.in/auction-property/view-auction-property.aspx மற்றும் www.unionbankofindia.bank.in. என்ற வலைதளத்தில் காணலாம். ஏலம் தொடர்பான சந்தேகங்களுக்கு யூனியன் பேங்க் ஆஃப் இந்தியா, சென்னை- சொத்து மீட்பு கிளை, எண்.168, 2வது தளம், லிங்கி செட்டி தெரு, பாரிஸ் கார்னர், சென்னை-600001, மொபைல்: 91375547408 / 8248254147, அல்லது ubin0554740@unionbankofindia.bank.in என்ற மின்னஞ்சல் முகவரியில் தொடர்பு கொள்ளவும்.

பிணைய நலன் (அமலாக்க) சட்டம் 2002-இன் விதி 8 & 9 இன் கீழ் சட்டபூர்வமான 15 நாட்கள் விற்பனை அறிவிப்பு.
மேற்குறிப்பிட்ட தேதியில் மின் ஏல விற்பனை நடைபெறுவது குறித்து, பிணைய நலன் (அமலாக்க) சட்டம் 2002-இன் விதி 8 & 9 இன் கீழ் இந்த அறிவிப்பானது கடன்தாரர்/கள் மற்றும் ஜாமீன்தாரர்/கள் மேற்குறிப்பிட்ட கடன் தொகையினை செலுத்துவதற்கான அறிவிப்பாகவும் கருதப்படும்.

தேதி : 05.09.2026;
இடம் : சென்னை

அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி,
யூனியன் பேங்க் ஆஃப் இந்தியா

பாங்க் ஆஃப் பரோடா / बैंक ऑफ़ बड़ौदा / Bank of Baroda
India's International Bank
119 FOUNDATION YEAR LEADING WITH TRUST

பேங்க் ஆப் பரோடா

தூத்துக்குடி கிளை : எண்.159A, விக்டோரியா வீதி, தூத்துக்குடி – 628 001.
போன் எண். 0461–2321224, மொபைல் : 96866 01844, மின்னஞ்சல் : TUTICO@bankofbaroda.bank.in

அசையாச் சொத்துக்களுக்கான விற்பனையின், விற்பனை அறிவிப்பு

பிற்சேர்க்கை –IV-A (காண்க, நிபந்தனைகளின் விதி 6(2) & 8(6))

கடனீட்டு சொத்துக்கள் ரொக்கமாக்குதல் மற்றும் நிதி சொத்துக்களை மறு சீரமைத்தல் கடனீட்டு சொத்துக்கள் மீதான உரிமை அமலாக்க சட்டம், 2002 பிரிவு 6(2) & 8(6)–ன் கீழ் அசையாச் சொத்துக்களுக்கான விற்பனையின் மின்–ஏல விற்பனை அறிவிப்பு.
கீழே விவரிக்கப்பட்டுள்ள பாங்க் ஆப் பரோடா வங்கியில் அடமானம் வைக்கப்பட்டுள்ள சொத்தினை வங்கி அங்கீகாரம் பெற்ற அதிகாரி சுவாதீனம் எடுத்துள்ளார். இதன் மூலம் பொதுமக்கள் மற்றும் கடன்தாரர்கள், ஜாமீன்தாரர்கள், அடமானதாரர்கள் அனைவருக்கும் அறிவிப்பது என்னவென்றால், பாதுகாக்கப்பட்ட கடனீந்தவரின் அடமானத்திற்குள்ளான/சுடு வைக்கப்பட்ட, வங்கியின் அங்கீகரிக்கப்பட்ட அதிகாரியால் சுவாதீனப் படுத்தப்பட்ட கீழே குறிப்பிட்டுள்ள சொத்து, நிலுவையை வசூலிக்க வேண்டி "எங்கு உள்ளனவோ அந்நிலையில்", "என்ன உள்ளனவோ அப்படியே", "எப்படியுள்ளதோ அப்படியே" எனும் முறையில், மின் ஏல விற்பனை செய்யப்பட உள்ளது. கடன்தாரர்(கள்) / அடமானதாரர்(கள்) / உத்தரவாதமளித்தவர்(கள்) / பாதுகாக்கப்பட்ட சொத்து(க்கள்) / நிலுவைகள் / நிர்ணயிக்கப்பட்ட விலை / முன்வைப்புத் தொகை / மின் ஏலத் தேதி மற்றும் நேரம் / ஏல அதிகரிப்பு தொகை போன்ற விபரங்கள் கீழே குறிப்பிடப்பட்டுள்ளன.

கடன்தாரர்கள் / உத்தரவாதம் அளித்தவர்கள் / அடமானதாரர்கள் பெயர் மற்றும் விலாசம்	அசையாச் சொத்தின் விரிவான விபரம் வில்லங்கங்கள் ஏதேனும் இருப்பின் அதனுடன் (உரிமையாளர் / அடமானதாரர் பெயர்)	மொத்த நிலுவைத் தொகை	மின் ஏலத் தேதி / நேரம்	1. குறைந்தபட்ச விலை, 2. முன் வைப்புத் தொகை 3. ஏல உயர்வுத் தொகை	சுவாதீன நிலை (ஆக்கபூர்வ/ கொள்நிலை)	சொத்தினைப் பார்வையிடும் தேதி / நேரம்
1. M/s.GTM டிரேடர்ஸ் (கடன்தாரர்), பிரதிநிதியாக அதன் உரிமையாளர் : திருமதி.M.சுமதி (அடமானதாரர்), க/பெதிரு.மணிகண்டபாக்கியராஜ், எண்.2B, பெரோரா சந்து, தூத்துக்குடி, தூத்துக்குடி மாவட்டம். திரு.மணிகண்டபாக்கியராஜ் (உத்தரவாதமளித்தவர் மற்றும் அடமானதாரர்), த/பெதிரு.கனேசன், எண்.6/360, பொன்சுப்பையா நகர் 2வது வீதி, ஆரோக்கியபுரம், தூத்துக்குடி, தூத்துக்குடி மாவட்டம்.	சொத்து எண்.1 : (கணேஷ் மகன் திரு.மணிகண்டபாக்கியராஜ் பெயரிலுள்ளது) : தூத்துக்குடி பதிவு மாவட்டம், தூத்துக்குடி கீழூர் சார் பதிவு அலுவலக அதிகார வரம்பு, தூத்துக்குடி தாலுகா, தூத்துக்குடி கிராமம், சர்வே எண்.107, இதிலடங்கியதும் அதன் பகுதியுமான நிலம் மற்றும் கட்டிடத்தின், 8 ஏக்கர் 20 சென்ட், உட்பிரிவின்படி சர்வே எண்.107/1A1 ல் 3 ஏக்கர் 52 சென்ட், இதில் வடபுற பகுதி 99 சென்டில் தென்புற பகுதி 50 சென்ட் மேலும் சர்வே எண்.108 ல் உள்ள 17 ஏக்கர் 48 சென்ட், தற்போதைய உட்பிரிவு சர்வே எண்.108/1A1A1 ல் 7 ஏக்கர் 56 சென்ட், இதில் வடபுற பகுதி 37 சென்ட், மொத்தம் 87 சென்ட் நிலம் வீட்டு மனை பிளாட்டுகளாகப் பிரிக்கப்பட்டதில், தூத்துக்குடி பஞ்சாயத்து யூனியனின் லேஅவுட் எண்.A3/1786/82 ன்படி மனை எண்.13 ன் மேற்புற பகுதி 2.50 சென்ட், அதனோடான வீடு– கதவு எண்.6/360, லட்சுமிபுரம், சொத்தின் எல்லைகள் விபரம் : எல்லைகள் : வடக்கு – 16.50 அடி அகல கிழமேல் பொது ரோடு, மேற்கு – மனை எண்.12 ல் உள்ள வீட்டின் பொதுச் சுவர், தெற்கு – லீலாவதியம்மாளுக்குச் சொந்தமான சொத்து, கிழக்கு – மனை எண்.13 ன் கிழபுற பகுதியிலுள்ள வீட்டுப் பொதுச் சுவர். வங்கிக்குத் தெரியவந்த வில்லங்க விபரம் : NIL அட்சரேகை : 8.822194, தீர்க்கரேகை : 78.151833 சொத்து எண்.2 : (திரு.மணிகண்டபாக்கியராஜ் மனைவி திருமதி.M.சுமதி பெயரிலுள்ளது) : தூத்துக்குடி பதிவு மாவட்டம், தூத்துக்குடி கீழூர் சார் பதிவு அலுவலக அதிகார வரம்பு, ஒட்டப்பிடாரம் தாலுகா, மேல அரசடி கிராமம், புஞ்சை சர்வே எண்.130/2, இதிலடங்கியதும் அதன் பகுதியுமான நிலம் மற்றும் கட்டிடத்தின், 0.47.00 ஹெக்டேர் சமமான 1 ஏக்கர் 16 சென்டில் கிழபுற பகுதி 0.22.26 ஹெக்டேர் சமமான 55 சென்ட் அமைந்த எல்லைகள் விபரம் : எல்லைகள் : வடக்கு – சுப்பையா, P.D.சிதம்பரம் பிள்ளை ஆகியோருக்குச் சொந்தமான சர்வே எண்.130/3B, 130/3A1A1 ல் உள்ள நிலம், தெற்கு – சர்வே எண்.129 ல் உள்ள வழித்தடம், கிழக்கு – குப்பா ரெட்டியாருக்குச் சொந்தமான சர்வே எண்.128/3A2 நிலம் மற்றும் சர்வே எண்.130/7B ல் உள்ள நிலம், மேற்கு – C.N.வெற்றிவேலுக்குச் சொந்தமான சர்வே எண்.130/2 ல் உள்ள நடுப்பகுதி 40 சென்ட். வங்கிக்குத் தெரியவந்த வில்லங்க விபரம் : NIL அட்சரேகை : 8.877056, தீர்க்கரேகை : 78.121583 சொத்து எண்.3 : (திரு.மணிகண்டபாக்கியராஜ் மனைவி திருமதி.M.சுமதி பெயரிலுள்ளது) : தூத்துக்குடி பதிவு மாவட்டம், தூத்துக்குடி கீழூர் சார் பதிவு அலுவலக அதிகார வரம்பு, தூத்துக்குடி தாலுகா, தூத்துக்குடி கிராமம், சர்வே எண்.108/1A1A1A1A6 பகுதி, இதிலுள்ள 7 ஏக்கர் 56 சென்டின் கிழபுற கோடி, வடபுறப் பகுதி 1 ஏக்கர் 22 சென்ட், இதில் வடபுற பாதிப் பகுதி அதில் மேற்புறப் பகுதி 30.5 சென்ட்டில், கிழபுறப் பகுதி 9.04 சென்ட், இதில் நடுப்பகுதி 7.04 சென்ட் நிலம், அதனோடான வீடுகளுடன் (கதவு எண்.6/360/6, 6/360/6A, 6/360/6B, 6/360/6C, 6/360/6D, 6/360/6E) கூடிய சொத்தின் எல்லைகள் விபரம் : வடக்கு – பூவனைந்த நாடார், உலகு வாத்தியார், சூடாமணி ஆகியோருக்குச் சொந்தமான சொத்து, தெற்கு – 17 அடி அகல கிழமேல் பொது வழித்தடம், கிழக்கு – 'பவர்' அதிகாரம் மூலமாக ராமசாமிக்கு வழங்கிய சொத்து, மேற்கு – பட்டுக்கனி வைத்துள்ள சொத்து. அளவுகள் : (மேற்புற பகுதி) கிழமேல் இருபுறமும் 31 அடி, தென்வடல் இருபுறமும் 70½ அடி, மொத்தம் 2185.5 சதுரடி. அளவுகள் : (கிழபுற பகுதி) கிழமேல் வடபுறம் 13½ அடி, தென்புறம் 17 அடி, தென்வடல் மேற்புறம் 57½ அடி, கிழபுறம் 58½ அடி. மொத்தம் 884.5 சதுரடி, ஆக மொத்தம் 3070 சதுரடி சமமான 7.04 சென்ட். உட்பிரிவின்படி சொத்தானது சர்வே எண்.108/1A1A1A1A6A ல் பட்டா எண்.580 ன் கீழ் உள்ளது. வங்கிக்குத் தெரியவந்த வில்லங்க விபரம் : NIL அட்சரேகை : 8.822630, தீர்க்கரேகை : 78.152533	மொத்த நிலுவை 05.09.2026 தேதியன்று, 1. கேஷ் கிரெடிட் – ரூ.3,44,29,505.14 (ரூபாய் மூன்று கோடியே நாற்பத்து நான்கு லட்சத்து இருபத்து ஒன்பதாயிரத்து ஐநூற்று ஐந்து மற்றும் பைசா பதினான்கு மட்டும்) 05.09.2026 தேதியன்று தொகையை திரும்ப செலுத்தும் நாள் வரையான ஒப்பந்தப்படியான பின்வட்டி, செலவுகள் மற்றும் கட்டணங்களுடன் 2. டேர்ம் லோன் – ரூ.10,75,276.35 (ரூபாய் பத்து லட்சத்து எழுபத்து ஐந்தாயிரத்து இருநூற்று எழுபத்து ஆறு மற்றும் பைசா முப்பத்து ஐந்து மட்டும்) 05.09.2026 தேதியன்று தொகையை திரும்ப செலுத்தும் நாள் வரையான ஒப்பந்தப்படியான பின்வட்டி, செலவுகள் மற்றும் கட்டணங்களுடன் ஆகமொத்தம் : ரூ. 3,55,04,781.49 (ரூபாய் மூன்று கோடியே ஐம்பத்து ஐந்து லட்சத்து நான்காயிரத்து எழுநூற்று எண்பத்து ஒன்று மற்றும் பைசா நாற்பத்து ஒன்பது மட்டும்) 05.09.2026 தேதியன்று தொகையை திரும்ப செலுத்தும் நாள் வரையான ஒப்பந்தப்படியான பின்வட்டி, செலவுகள் மற்றும் கட்டணங்களுடன்	08.10.2026 பிற்பகல் 2.00 மணி முதல் மாலை 6.00 மணி வரை	சொத்து எண்.1 : நிலம் மற்றும் கட்டிடம் : 1. ரூ.42,30,000/– (ரூபாய் நாற்பத்து இரண்டு லட்சத்து முப்பதாயிரம் மட்டும்) 2. ரூ.4,23,000/– (ரூபாய் நான்கு லட்சத்து இருபத்து மூன்றாயிரம் மட்டும்) 3. ரூ.1,00,000/– (ரூபாய் ஒரு லட்சம் மட்டும்) சொத்து எண்.2 : நிலம் மற்றும் கட்டிடம் : 1. ரூ.1,61,07,900/– (ரூபாய் ஒரு கோடியே அறுபத்து ஒரு லட்சத்து ஏழாயிரத்து தொள்ளாயிரம் மட்டும்) 2. ரூ.16,10,790/– (ரூபாய் பதினாறு லட்சத்து பத்தாயிரத்து எழுநூற்று தொண்ணூறு மட்டும்) 3. ரூ.1,00,000/– (ரூபாய் ஒரு லட்சம் மட்டும்) சொத்து எண்.3 : நிலம் மற்றும் கட்டிடம் : 1. ரூ.1,74,46,600/– (ரூபாய் ஒரு கோடியே எழுபத்து நான்கு லட்சத்து நாற்பத்து ஆறாயிரத்து அறுநூறு மட்டும்) 2. ரூ.17,44,660/– (ரூபாய் பதினேழு லட்சத்து நாற்பத்து நான்காயிரத்து அறுநூற்று அறுபது மட்டும்) 3. ரூ.1,00,000/– (ரூபாய் ஒரு லட்சம் மட்டும்)	ஆக்கபூர்வ (Constructive) சுவாதீனம்	05.10.2026 காலை 10.00 மணி முதல் மாலை 4.00 மணி வரை

விற்பனை குறித்த விரிவான நிபந்தனை விபரங்களுக்கு https://bankofbaroda.bank.in/e-auction மற்றும் ஆன்லைன் ஏலத்தின் போர்டல் https://baanknet.com இணையதளங்களில் லிங்க்–ல் பார்வையிடலாம். மேலும் அங்கீகரிக்கப்பட்ட அதிகாரியை மொபைல் எண்.9686601844; என்ற எண்ணில் தொடர்பு கொள்ளலாம்.

தேதி : 05.09.2026 / இடம் : தூத்துக்குடி

(அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி), பேங்க் ஆஃப் பரோடா